2001 ஜனவரி 23] [திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்]

தொடர்ந்து அந்த மீனவர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற அதேவேளையில், ஒரு நாளிதழில் மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள், மீனவர்களை மீட்டுவர மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுப்பதாக ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள். தொடர்ந்து தமிழக அரசும், அவர்களை மீட்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கின்ற வேளையில் மாலத் தீவிலுள்ள மீனவர்கள் இங்கே வந்தாலும் அவர்களை விடுவித்துத் திரும்ப அனுப்புவதற்கு இங்கே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தித்தான் விடுவிப்பார்கள். எனவே, நமது மீனவர்களை மீட்க இந்த அரசு மீண்டும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, விரைவில் அந்த மீனவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதை உங்கள் மத்தியிலே தெரிவித்து அமர்கிறேன், நன்றி.

3. தகவல் கோரல்

சிமென்ட் விலையேற்றத்தைத் தடுக்கக் கோரி புரட்சித் தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஊர்வலம்

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் நீண்டநாள் அமைச்சராக இருந்த திரு. எஸ்.டி.எஸ். அவர்களும், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், அவர்களுடைய புரட்சித் தலைவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, இன்று ஓர் ஊர்வலம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள், இப்போது. அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், தமிழ்நாட்டில் மட்டும் சிமென்ட் விலை பயங்கரமாக ஏறி, 200 ரூபாய்க்கு மேலே போய், அதன் காரணமாக, சிமென்ட் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு, அதில் ஈடுபடுகின்ற கட்டடத் தொழிலாளர்களும், இன்று வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அதற்கு ஒரு நிவாரணம் தேடவேண்டுமென்று கேட்டு ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் எல்லாம் மிகக் குறைந்த விலைக்கு சிமென்ட் விற்கிறபோது, தமிழ்நாட்டில் மட்டும் ஏன் இந்த உயர்ந்த விலை என்று எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொறுப்புள்ள தலைவர்கள் ஊர்வலமாக வந்து கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா, இதற்கு நம்முடைய அரசு என்ன பதில் கூற விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

53-417—9a

[2001 ஜனவரி 23

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்தப் பிரச்சினைக் குறித்து முன்னாள் அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் போன்றவர்கள் இன்று ஊர்வலம் வருவதாகவும், ஒரு விண்ணப்பத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே அளிக்க வேண்டும் என்றும், இரண்டு தினங்களுக்கு முன்னாலேயே அனுமதி கேட்டார்கள். முதலமைச்சர் அவர்களும், அந்த ஊர்வலத்திற்கு அனுமதித் தந்து விண்ணப்பம் பெறுவதற்குத் தயாராக இருந்தார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அந்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். நானும் அவர்கள் வந்தவுடனே அவர்களைச் சந்தித்து அந்த விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த சிமெண்ட் விலை இன்றைய தினம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை கட்டுமானப் பணிகளிலே ஈடுபட்டு இருக்கிறவர்களும், தொழிலாளர்களும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கமும் இதுபற்றி ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நினைத்தபோது, கட்டுப்படுத்தப்பட்ட தனி உரிமை வியாபார நடைமுறை விதிகளின்படி, அதாவது M.R.T.P. Act-ன்படி சிமெண்ட் விலை உயர்வதற்கான காரணங்களை விளக்குமாறு M.R.T.P. Commission கீழ்க்கண்ட 5 சிமெண்ட் உற்பத்தியாளர்களை விளக்கம் கேட்டுள்ளது.

1. கிராசிம் சிமெண்ட்; (2) இந்தியா சிமெண்ட்; (3) எல். & டி. சிமெண்ட்; (4) குஜராத் அம்புஜா; (5) ஏ.சி.சி. போன்ற இந்த 5 மிகப்பெரிய சிமெண்ட் ஆலை அதிபர்களை அழைத்து அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். M.R.T.P. Commission என்பது ஏறக்குறைய நம்முடைய சிவில் சட்டத்தின்படி விசாரணை நடத்தக்கூடிய ஒரு அதிகாரம் படைத்த அமைப்பு. அவர்கள் இப்போது, அந்த நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் இந்தப் பிரச்சினை குறித்து, மத்திய அரசுக்கும், குறிப்பாக, பிரதமருக்கும் நம்முடைய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் சென்ற காரணத்தால், மத்திய அரசும், நம்முடைய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சரிடம் கலந்து பேசி, அவர்களும் இன்றையதினம் சிமெண்ட் அதிபர்களை அழைத்து, அதற்கான காரணங்களைக் கேட்டு, சிமெண்ட் விலை உயர்வதற்கான

2001 ஜனவரி 23] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அடிப்படைக் காரணங்களை விசாரித்து, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே தமிழ்நாட்டிலே மட்டும்தான் ஏதோ சிமென்ட் விலை உயர்ந்திருக்கிறது, கேரளா போன்ற மாநிலங்களிலே எல்லாம் விலை குறைவாக இருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

முற்பகல் 11-15

நான் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு 19-1-2001 அன்றைய நிலவரப்படி எனக்குக் கிடைத்த அந்தத் தகவல்களை இங்கே சொல்கின்றேன். தமிழ்நாட்டில் சங்கர் சிமெண்ட் சில்லறை விலையிலே ரூ.190-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. ராம்கோ சிமென்ட் ரூ. 195-லிருந்து ரூ.197 வரை விற்கிறது. செட்டிநாடு சிமெண்ட் ரூ.190 முதல் ரூ. 197 வரை; L&T சிமெண்ட் ரூ. 190-லிருந்து ரூ. 199 வரை; அரசு சிமெண்ட் ரூ.170-லிருந்து ரூ.177 வரை விற்றுக் கொண்டிருக்கின்றோம்.

அதைப்போல கேரளாவில் சங்கர் சிமென்ட் 19-1-2001 நிலவரப்படி ரூ.184-லிருந்து ரூ.199 வரையிலே விற்கிறது. டால்மியா சிமெண்ட் ரூ.194 முதல் ரூ.197 வரையிலே விற்கிறது. அம்புஜா சிமெண்ட் ரூ.192-லிருந்து ரூ.193 வரையிலே விற்கிறது. ஏ.சி.சி. சிமெண்ட் ரூ.178லிருந்து ரூ.191 வரையிலே விற்கிறது. L & T சிமெண்ட் ரூ.182-லிருந்து ரூ.192 வரையிலே விற்கிறது. இப்படி கேரளா மற்றும் அகில இந்திய அடிப்படையிலே பார்த்தால்கூட பம்பாயிலேயும் சிமெண்ட் விலை இன்றைய தினம் 190 ரூபாய்க்கு அதிகமாக விற்கிறது என்று பம்பாயிலே இருக்கக்கூடிய அரசாங்கமே இன்றைய தினம் மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, இந்தப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரும் நம்முடைய மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சரிடத்தில் இது குறித்துப் பேசியிருக்கிறார். விரைவிலே மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

4. அறிவிப்பு

பேரவைக் கூட்டம் 25-1-2001 அன்று நடைபெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-1-2001 அன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவின்